ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2166/46 - 2020 මාර්තු මස 13 වැනි සිකුරාදා - 2020.03.13
*2166/46 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 13 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச. வ. பி. 12/2014* (1)

**2008 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க, வாழ்க்கைத்தொழில்சார் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகச் சட்டம்**

*8(1)(ஆ) என்னும் பிரிவின் கீழான கட்டளை*

*2008 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க, வாழ்க்கைத்தொழில்சார் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகச் சட்டத்தின் 8(1)(ஆ) என்னும் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக்கொண்டு, உயர் கல்வி, தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்க அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்த்தன ஆகிய நான், இலங்கை, வாழ்க்கைத்தொழில்சார் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகத்தினது அலுவல்களின் நிர்வாகம் பாரதூரமானமுறையில் சீர்குலைந்துள்ளதெனவும் சொல்லப்பட்ட பல்கலைக்கழகத்தின் அதிகாரிகள் வழமையான நிலைமைகளை மீள நிலைநாட்டுவதற்குத் தவறிள்ளனரெனவும் திருப்திப்படுவதன்மீது, சொல்லப்பட்ட சட்டத்தின்கீழ் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளையின், கட்டளைச்சட்டத்தின், நியதிச்சட்டத்தின், துணைவிதியின், ஒழுங்குவிதியின் அல்லது விதியின்கீழ் இலங்கை, வாழ்க்கைத்தொழில்சார் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தருக்கு அளிக்கப்பட்டுள்ள அல்லது அவர்மீது சுமத்தப்பட்டுள்ள அல்லது அவருக்குக் குறித்தளிக்கப்பட்டுள்ள முறையே ஏதேனும் தத்துவத்தை, கடமையை அல்லது பணியைப் பிரயோகிக்கும், புரியும் அல்லது நிறைவேற்றும் நோக்கத்திற்காக, இலங்கை, வாழ்க்கைத்தொழில்சார் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகத்தின் சொல்லப்பட்ட துணைவேந்தருக்குப் பதிலாகத் தகுதிவாய்ந்த அதிகாரியாக இருப்பதற்குச் சிரேட்ட பேராசிரியர் வச்சா பட்டபன்டிகே ரஞ்சித் பிரேமலால் டி சில்வா அவர்களை 2020, மாச்சு மாதம் 17 ஆந் திகதியிலிருந்து இக்கட்டளைமூலம் நியமிக்கின்றேன்.*

*கலாநிதி பந்துல குணவர்த்தன,*
*உயர் கல்வி, தொழில்நுட்பம் மற்றும்*
*புத்தாக்க அமைச்சர்.*

கொழும்பு,
*2020, மாச்சு 13.*

*03 - 1041*

1 A - PG 4938 - 377 (2020/03) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.
இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.